மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 81/2022

பெயர் – ராமராஜ்(வா.சா.1)

நாள் – 05.08.2024

5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் அனுபவம் செய்து வரும் சொத்துக்காக ஏற்கனவே நான் பணம் கொடுத்துள்ளேன். ஆனால் அதை அவர்கள் சொத்து என்று சொல்கிறார்கள். அதை எனக்கு எழுதி கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். N.கண்ணன், பானுமதி ஆகிய இருவரும் எழுதி தர மறுக்கிறார்கள். வச்சக்காரப்பட்டி காவல் நிலையத்திற்கு எப்போது சென்றிருந்தோம் என்றால் தேதி ஞாபகமில்லை, ஒரு வருடத்திற்கு முன்பாக சென்றிருந்தோம். என் மீது 1, 2 பிரதிவாதிகள் நான் இடத்தை அனுபவம் செய்து வருவதாக புகார் கொடுத்தார்கள். அது சம்மந்தமாக வச்சக்காரப்பட்டி காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். அதற்கு மனு ரசீது எண்.26/2022 வழங்கப்பட்டது என்றால் தெரியாது. அந்த விசாரணையில் என்ன நடந்தது என்றால் தெரியாது. அதன் பிறகு என் மீது 1ம் பிரதிவாதி புகார் கொடுத்தாரா என்றால் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளார். தேதி மாதம் ஞாபகமில்லை. 19.04.2022, 24.11.2022 ஆகிய தேதிகளில் 1ம் பிரதிவாதி என் மீதும், அழகர்ராஜ், அழகம்மாள், சித்ராதேவி ஆகியவர்கள் மீது சொத்துகளையும், நகைகளையும், அசல் ஆவணங்களையும் பெற்று தரும்படி புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதன் பேரில் விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். அதன் பேரில் நடைபெற்ற விசாரணையில் இருதரப்பினர்களும் சிவில் சம்மந்தமான பிரச்சினை என்பதால் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளுவதாக 5ம் பிரதிவாதியிடம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 5, 6 பிரதிவாதிகள் தங்களது கடமைகளை சரிவர செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

(1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டு கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).